## பொல்லாத இருதயம்

**மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. (ஆதி 6:5,6)**



மேற்கண்ட இந்த காரியங்கள் ஆண்டவர் பூமியையும், மனிதனையும் படைத்த சில நூற்றாண்டுகளுக்கு உள்ளாகவே நடந்தேறின. இது ஆதியாகம புத்தகத்தின் ஆரம்பத்திலேயே பதியப்பட்டுள்ளது. ஆதியாகமத்தின், முதல் இரண்டு அதிகாரங்கள் சிருஷ்டிப்பின் அருமையான நிகழ்வுகளைப் பற்றி கூறுகிறது. ஆனால் மூன்றாம் அதிகாரத்தில் ஆதாம் ஏவாளின் மீறுதலும், நான்காம் அதிகாரத்தில் உலகில் முதல் பிறந்த மனிதனாகிய காயின், தன் சகோதரனை கொலை செய்தல், **(ஆதி 4:8)**, லாமேக்கு கொலை செய்தல் **(ஆதி 4:23)** என்று குறுகிய காலத்திற்குள்ளாகவே இப்படிப்பட்ட பொல்லாத செயல்கள் பூமியில் பெருகினது. இதனால்தான் ஆண்டவர் **"அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே" (ஆதி 6:5)** என்றார். மேலும் தாம் அருமையாக பார்த்து பார்த்து 6 நாட்களாக சிருஷ்டித்த ஜீவன்களை எல்லாம் மனிதனின் பொல்லாப்பின் நிமித்தம் அழிக்க சித்தங்கொண்டார். **"தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது." (ஆதி 6:6)** என்பது, மனித இருதயத்தின் பொல்லாத காரியங்கள் எவ்வளவாய் ஆண்டவர் இருதயத்தை வேதனைப்படுத்தியது என்பதை விளக்குகிறது. இதனால் நோவா காலத்தில் அவருடைய குடும்பத்தினர் 8 பேர் மற்றும், அவரோடு பேழைக்குள் இருந்த ஜீவ ஜந்துக்கள் தவிர மற்ற அனைத்தும் அழிக்கப்பட்டன. ஆனால் ஆதியாகமம் 9ஆம் அதிகாரத்திலேயே, நோவா கானானை சபிப்பதும் **(ஆதி 9:25)**, 11 ஆம் அதிகாரத்தில் நமக்குப் பேர் உண்டாகப் பண்ணுவோம் **(ஆதி 11:4)** என்று கூறி பாபேல் கோபுரத்தை கட்டினதும், நோவா காலத்திற்கு பின்பு

எவ்வளவு தீவிரமாய் மனித இருதயம் பொல்லாததாய் மாறியது என்பதை காணலாம். ஆண்டவர் எவ்வளவோ அற்புத அடையாளங்களை இஸ்ரவேல் மக்களிடத்தில் செய்திருந்தும், இன்னும் பல விதங்களில் சிருஷ்டிக் கர்த்தராகிய தம்மை இவ்வுலக மக்களிடத்தில் வெளிப்படுத்தியும், மனித இருதயம் தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தும், அவர் விரும்பாத காரியத்தை செய்ய விரும்புகிறது. உலகமெங்கும் காலம் காலமாய் மக்களின் வாழ்க்கை முறைகளிலும், தொழில் மற்றும் அறிவியல் துறைகளிலும், எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், உலகமெங்கிலும் உள்ள மனிதரின் இருதயமோ தேவனுக்கு விரோதமாக பொல்லாததாக காணப்படுகிறது.

**லூக் 6:45** கூறுகிறது **"நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்"** மேலும் **பிரசங்கி 7:29** கூறுகிறது "இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்; அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள்; இதைமாத்திரம் கண்டேன்." இங்கு நாம் காண்கிறபடி ஆண்டவர் மனிதனை செம்மையான இருதயத்தோடு தான் சிருஷ்டித்தார், ஆனால் மனிதனுக்கோ இவ்வுலகு உபாய தந்திரங்களில் தான் விருப்பம் உள்ளதே தவிர செம்மையான வழியில் செல்ல விருப்பம் இல்லை. காரணம் இவ்வுலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறபடியினால் பொல்லாத வழிகளே, எளிதான வழிகளாய், அகலமான சுகமான வழிகளாய் காணப்படுகிற படியால், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ பெரும்பாலான மனிதர்களுக்கு விருப்பம் இல்லை. இப்படித்தான் வாழவேண்டும் என்ற முறைக்கு உட்பட்டு வாழ விரும்பாமல், எப்படியும் வாழலாம் என்று தங்கள் மாம்சமும் மனசும் விரும்பினதை செய்கின்றனர். கண்களின் இச்சையும்,, மாம்சத்தின் இச்சையும்,, ஜீவனத்தின் பெருமையும் மனித இருதயத்தின் பொல்லாத நிலையின் வெளிப்பாடே.

அன்றிலிருந்து இன்றுவரை, ஆண்டவர் நல்ல வாழ்க்கையை, குடும்பத்தை மற்றும் சகல நன்மைகளையும் தந்திருந்தும், அதற்கு நன்றியோடு வாழாவிட்டாலும், பொல்லாத காரியங்களை செய்யாமலாவது வாழலாம். ஆனால் நன்மைக்கு தீமை செய்யும் பொல்லாத இருதயம், பரலோக வாழ்வை குறித்தோ, இவ்வுலக வாழ்வின் நன்மைகளை குறித்தோ, நித்திய நியாயத் தீர்ப்பைக் குறித்தோ கவலைப்படாமல், இவ்வுலகில் உள்ள வரை சுகபோகமாய், தன் இஷ்டப்படி வாழ விரும்புகிறது. அப்படிப்பட்ட வாழ்க்கைக்கு எப்படிப்பட்ட தீமையான காரியங்களை செய்தாலும் தவறில்லை என்ற எண்ணம் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட பொல்லாத இருதயத்தின் செயல்களே, கடைசி காலத்தில் வெளிப்படையாக சிறியோர் முதல் பெரியோர் வரை ஒவ்வொருவர் வாழ்விலும் காணப்படுகிறது. இருதயத்தில் உள்ள தீமையான காரியங்களை வெளிப்படையாக செய்ய தயங்கிய காலம் சென்று, இன்று வெளிப்படையாக பொல்லாத செயல்கள் செய்யப்படுகிறது. காரணம், இன்று கொஞ்சம் குறைய சிறியோர் முதல் முதியோர் வரை அனைவரின் இருதயமும் கரைப்பட்டிருக்கிறபடியால், யாரும் யாரையும் குற்றச்சாட்ட கூடாதவர்களாய் உள்ளனர். இன்றுள்ள தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம், கைபேசி போன்றவைகள் யாரையும் அடக்க முடியாதபடி, தடுக்க முடியாதபடி அவரவர் மனம் போன போக்கில் வாழ செய்கிறது.

பொல்லாத இருதயத்தின் செயல்கள் காலகாலமாய் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும், இந்த கடைசி காலத்தில் கடைசி மணித்துளிகளில், அது ஒரு வெளிப்படையாக செயல்படுகிறது, இன்னும் இதில் என்ன தவறு என்று கூட சில பொல்லாத செயல்கள் நியாயப்படுத்தப்படுகின்றன. நாட்டை ஆளுகின்ற தலைவர்கள் முதல் சாதாரண குடிமகன் வரை பொல்லாப்பு பல்வேறு விதங்களில் ஒவ்வொருவர் வாழ்விலும் காணப்படுகிறது. கடைசி காலத்தில் சத்தியம் எவ்வளவுதான் அறிவிக்கப்பட்டாலும், மனிதர்கள் அதை கேட்டாலும், அதற்கு கீழ்படிய அவர்களுக்கு மனதில்லை. இதில்

மற்றொரு வேதனையான காரியம் என்னவென்றால், சத்தியத்தின்படி வாழ்ந்து பலருக்கு நன்மைகளைத் தரும் வாய்க்கால்களாய் இருந்த தேவபிள்ளைகளுடைய சந்ததியாரின் இருதயமும், இன்று பொல்லாததாய் மாறியுள்ளது. சபை ஊழியத்தை உண்மையும், உத்தமுமாய் செய்து, ஒரு கூட்டம் மக்களை ஆண்டவருக்காக மணவாட்டி திருச்சபையாய் உருவாக்கி, அதை அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைத்த போது, அவர்கள் தங்களுடைய பொல்லாத இருதயத்தின் செயல்களால் எத்தனையோ ஆண்டு காலமாய் அருமையாய் கூட்டி சேர்க்கப்பட்ட திருச்சபையை, இன்று சிதறிப் போக செய்துள்ளனர். எந்த உலகத்தில் இருந்து வேறு பிறிக்கப்பட்டு திருச்சபையாய் ஏற்படுத்தப்பட்டனரோ, இன்று ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று அதே உலகத்தை திருச்சபைக்குள்ளாய் கொண்டுவந்து, வேறு பிரிக்கப்பட்ட ஜீவியம் என்பது மறக்கடிக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு பொல்லாத இருதயத்தின் செயல்கள் திருச்சபைக்குள்ளும் பரவிவருகிறது. இவையெல்லாம் இன்னும் தேவனை உறுதியாய் பற்றிக் கொண்டுள்ள ஒரு கூட்டம் மக்களுக்கு, வேதனை அளிப்பதாக, அவர்கள் வாழ்விலும் பல இன்னல்களை கொண்டு வருவதாக உள்ளது. இதனால் ஒருவிதக் கலக்க உணர்வுடனேயே தேவ பிள்ளைகள் வாழ வேண்டியிருக்கிறது. சமுதாயத்திலும், வேலை செய்யும் இடத்திலும், திருச்சபையிலும், சொந்த குடும்பத்தின் மத்தியிலும் காணப்படும் கொல்லாத இருதயத்தில் செயல்கள், ஆண்டவரே இவற்றிற்கெல்லாம் எப்பொழுதும் முடிவு உண்டாகும் என்று ஆண்டவரை நோக்கி கேட்க செய்கிறது. ஆனால் ஆண்டவரோ நீடிய பொறுமை உள்ளவராக இருக்கிறார். அவர் நிச்சயம் நியாயம் செய்வார், நம்முடைய வேலை எல்லாம் இந்தப் பொல்லாத இருதயத்துக்கு ஒருபோதும் இடம் கொடுக்காமல், எப்படிப்பட்ட பொல்லாத இருதயத்தின் செயல்களையும் மன்னிக்கத்தக்க ஆண்டவருடைய அன்பை பற்றி மாத்திரம் மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அந்த அன்பிற்கும் கீழ்ப்படியாமல் போனால், நரக அக்கினி மாத்திரமே முடிவு என்பதை கூற வேண்டும். கர்த்தர் தாமே இப்படிப்பட்ட பொல்லாத இருதயத்தின் செய்கைகளை நம்மை விட்டும், நமக்கு அருமையானவர்களை விட்டும் விலக்கி, சமாதானத்தோடு இம்மையிலும், நித்திய சந்தோஷத்தோடு மறுமையிலும் வாழ உதவி செய்வாராக, ஆமென் அல்லேலூயா.